

# “என் தேடல் நீ”

எழுதியவர்: டிசில்வா-வெலிங்டன்-ஊட்டி மறைமாவட்டம்

# “என் தேடல் நீ”

கேள்வி : யாரைத் தேடி வந்தீர்கள்? (அரு:18-487)

பதில் : நசரேத்தார் இயேசுவை (அரு: 18 6-8)

மீண்டும் இயேசுவின் கேள்வி : **நண்பா எதற்காக வந்தாய்**? (மத் 26:50)

இக்கேள்விகளுக்கு பதில் தேட இந்த சிலுவைப் பாதையைத் தொடர்வோம்.

தேடுதல் இல்லாத ஓர் வாழ்க்கையை யாரும் கொண்டிருக்க முடியாது. அப்படி தேடுதல் தொடரும் போது கண்டிப்பாக ஒன்றை இழக்க வேண்டும். இயேசு மனிதனின் மீட்பைத் தேடி வந்த போது விண்ணகத்தை இழந்தார்.

நீங்களும் நானும் **யாரை? எதை? எப்படி? எப்போது? ஏன்?** தேடுகின்றோம். அப்படி தேடத்தொடங்கிய பின் **“எதை”** இழப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

நமது சுயநலம், பொறுப்புகள், அந்தஸ்து, அங்கீகாரம், முடிவாக **“நான்”** எனும் நமது சுயத்தை - நம்மை இயேசுவுக்குள் இழப்பதற்கு தயார் ஆகுவோம்.

வாருங்கள் இயேசுவுக்குள் நம்மைத் தேடுவோம். ‘‘என் இயேசுவே எனக்குள் வாரும்’’ என்று ஜெபிப்பதை விட - **“என் இயேசுவே நான் உமக்குள் வந்திட எனக்கு வரம் அருளும்”** என்று ஜெபித்துக் கொண்டே இச்சிலுவையின் பாதையைத் தொடர்வோம். புனித பவுல் அடிகளார் கூறுவது போல் மனித மீட்பான சிலுவை எனும் **“இலக்கை நோக்கி ஓடிக் கொண்டிருப்போம்”.** (பிலி: 3:14)

ஒவ்வொரு பாதையும் - ஒரு தேடுதலின் முடிவை தரும் போது அதற்கு அடையாளம் கிடைக்கின்றது. நமது தேடுதலிலும் நமது வாழ்விற்கு **“மன்னிப்பு”, “மனித நேயம்”** என்ற அடையாளங்களை பெற்றுக் கொள்ளவும், அதன் பயனாக பிறரால் - நம் **“அயலானால்”** நாம் கிறிஸ்து **“அவனாக/அவளாக”** அடையாளம் காணப்பெற

மன்னிப்பின் சின்னமான சிலுவையும் அதன் பாதையும் நமக்கு, நமது தேடுதலுக்கு விடையாகட்டும்.

இவண்,

உங்கள் அயலான்

**“முதல் நிலை”**

**“இதோ மனிதன்”**

**“பிலாத்து இயேசுவிற்கு மரணத்தீர்ப்பை அளிக்கின்றான்”**

திவ்ய இயேசுவே..................

யூதர்களின் அரசியல் விடுதலைக்காக **“யூதாஸ்”** இயேசுவைக் காட்டிக் கொடுத்தான். **“இராயப்பர்”** தன்னைக் காத்துக் கொள்ள இயேசுவை மறுதளித்தார்.

**“யூத குருக்கள்”** : தங்கள் மத மரபுகளை காத்துக் கொள்ள இயேசுவைக் காட்டிக் கொடுத்தனர்.

**“பிலாத்து”** : தனது பதவியை அந்தஸ்தைக் காத்துக் கொள்ள **“இதோ மனிதன்”** என கூடியிருந்த கூட்டத்திற்கு இயேசுவைக் காட்டி கொடுத்தான்.

**“இயேசு**” : மனித பீட்பிற்காக தன்னையே சிலுவைக்கு காட்டிக் கொடுத்தார். ஆக

**“காரணம் இல்லாமல் காரியம் இல்லை”.**

நாமும் பல காரியங்களை செய்து கொண்டு இருக்கின்றோம். அப்படி என்றால் அனைத்து காரியங்களும் ஏதோ ஓர் காரணத்தால் தொடங்கியுள்ளன.

நமது எந்த காரணம் எத்தகைய காரியமாக மாறியுள்ளது என்று **“நம்மை நாம் எப்போதாவது தீர்ப்பிட்டுள்ளோமா?”** நாம் இன்று நம்மையே தீர்ப்பிடுவோம்.

எத்தகைய நமது செயல்கள் நம்மையும், நமது அயலானையும் எப்படி பாதித்துள்ளது என்று தீர்ப்பிட இப்போது நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

இயேசுவுக்கு இடப்பட்ட தீர்ப்பு மனிதருக்கு மீட்பை தந்தது. நாம் இடும் தீர்ப்பு முதலில் நமக்கு எதைத் தருகின்றது?

அடுத்து நம்மைச் சுற்றியுள்ள பிறருக்கு எதை தந்துள்ளது?

இயேசுவின் தீர்ப்பு அவருக்கு மரணத்தைத் தந்தது. ஆனால், அவரது விலாவைத் திறந்த வீரனுக்கு இரத்தமும், நீருமாக வெளிப்பட்டு பார்வையைத் தந்தது.

**ஜெபம் :**

இறைவா, உலகம் இறைமகனுக்கு தந்த தீர்ப்பு, உலகிற்கு மீட்பைத் தந்தது.

அதேபோல், இன்று உலகம் எங்களுக்குத் தரும் தீர்ப்புகள் உலகிற்கு நிறைவையும் மகிழ்வையும் தரும் வண்ணம் எங்கள் வாழ்வை மாற்றும்.

எங்கள் பேரில் ................

என் தேடல் நீ ...........................

**"2-ம் நிலை"**

**"<u>பெற்றுக் கொண்ட அழைப்பிற்கு ஏற்ப பயனளியுங்கள்</u>" (எபே.4:2)**

**"இயசுவின் தோள் மேல் சிலுவைச் சுமத்துகின்றனர்."**

திவ்ய இயேசுவே............

சேவகர்கள் : அரசாங்க உத்தரவை நிறைவேற்ற இயேசுவின் மீது பாரச் சிலுவையை சுமத்தி தங்கள் கடமையை நிறைவேற்றினர்.

மரச்சிலுவை : அவமானத்தின் சின்னமான சிலுவை உலகில் அலங்காரச் சின்னமாக மாற எண்ணியதால் இயேசுவின் தோளில் அமர்ந்தது.

இயேசு : மனித மீட்பைத் தேடியபோது அது பாரச் சிலுவைக்குள் சிறைபட்டிருப்பதைக் கண்டு தனது தோளில் அதைத் தாங்கினார்.

நாம்...........,

நம் வாழ்வில் இன்று உழைப்பு மிக மிக முக்கியமானது. நமது உழைப்பின் மூலமாக எதைத் தேடுகின்றோம்? எத்தகைய மாற்றங்களால் நமது பொறுப்புகளை, கடமைகளை எளிதாக நிறைவேற்ற நினைக்கின்றோம். இயேசு மனித மீட்பை சிலுவையில் கண்டார், ஏற்றுக் கொண்டார் நாம் குறைந்த பட்சம் நமது மீட்பை எங்கு காண்கிறோம்? எப்படி ஏற்றுக் கொள்கிறோம்?

**"நமது மீட்பு நம் அயலானாக"** நம் முன் நிற்கின்றது. நாம் அவர்களை ஏற்றுக் கொள்ளத் தயார் ஆகுவோம்.

தனது வாழ்வில் சரியாக தனக்கென அளிக்கப்பட்ட கடமைகளை செய்யும் ஒவ்வொருவனும் கடவுளின் சார்பாக அவரது செயலைச் செய்கின்றான். இத்தகைய கடமை உணர்வு கடவுளை கண்ணியப்படுத்தி அவருடைய சாயலாக அவரால் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனையும் மகிழ்வால் நிறைவுறச் செய்கின்றது.

வாருங்கள் நாம் தேடுவோம், நமது பொறுப்புணர்வு என்ன செய்கின்றது என்று! இயேசுவிற்கு அளிக்கப்பட்ட பொறுப்பை அவர் தட்டிக்களிக்கவில்லை.

நமக்கு அளிக்கப்பட்ட பொறுப்புகளை நாம் அலட்சியப்படுத்தாமல் செயல்படுத்துவோம்.

**ஜெபம் :**

இறைவா, எங்கள் பொறுப்புகளை பெருமையுடன் நிறைவேற்றி எங்களையே கௌரவபடுத்தவும் அதேவேளையில் எங்களுடன் உறவுள்ள ஒவ்வொருவரையும் அது உமக்குள் அவர்களை கண்டு கொள்ள உதவவும் வரம் அருளும்.

எங்கள் பேரில் தயவாயிரும்..................

என் தேடல் நீ ..................

**“3-ம் நிலை”**

**“கவனம் தேவை”**

**“<u>இயேசு முதல் முறை தரையில் கீழே விழுகிறார்</u>”**

திவ்ய இயேசுவே…………….

யார் விழுவார்கள்?

நடந்து கொண்டு இருப்பவர், ஓடிக் கொண்டு இருப்பவர் இன்னும் நின்று கொண்டு இருப்பவர் கூட கீழே விழலாம். ஆனால் படுத்துக்கொண்டு இருப்பவர் கீழே விழ முடியுமா? நடை தொடரும் போது நாம் தடுக்கி விழுவதற்கு பாதையில் தடைகள் ஏராளம் - எனவே கவனம் தேவை.

தன்நம்பிக்கை அதிகமானால் - தடுக்கி விழலாம்

தளர்ச்சி அதிகமானால் - இடறி விடலாம்

**“சுயநலம் அதிகமானால்” - “விழுந்து கொண்டே இருக்கலாம்”**

இயேசு தனி ஒருவராக அவருடைய சுய - நன்மைகளை மறந்ததால், மனித சமுதாயத்தின் மீட்பை நினைத்ததால் எழுந்து நடந்தார்.

நம்மைச் சுற்றி பல காரணங்கள் உண்டு நாம் விழுவதற்கு ஆனால், நாம் **“எதை இலக்காக”** கொண்டு எழுந்து நடக்க ஆசைப்படுகின்றோம்.

**“நமது இலக்கு இயேசுவாக இருந்தால் அவர் நமக்கு வாழ்வாக, வழியாக, ஒளியாக, உணவாக, ஜீவ நீரூற்றாக இருந்து நம்மைத் தாங்கி கொள்ள தயாராக உள்ளார்”.**

நமது இலக்கு எது! ஆண்டவாகிய இயேசுவா? அல்லது நம்மைச் சார்ந்த நமது சுயநலமா? மறு பரிசிலனை செய்வோம். நமது இலக்கை அடையாளம் கண்டு அதைத் தேடிச் செல்வோம்.

இயேசுவோடு நாம் இணைந்து நடக்க முயற்சிக்கும் போது அன்பின், மன்னிப்பின் சிலுவை நமக்கு உறுதியான ஊன்றுகோலாக பயன்படுகின்றது. ஊன்றுகோல் உள்ளவன் வழியில் தடுக்கி வழுவது மிகவும் குறைவாகும்.

**ஜெபம்:**

என் தேவனே என் சுயநலம் காரணமாக நான் உம் அன்பையும் மன்னிப்பையும் மறுக்கும் நேரங்களில் கிழே விழுகின்றேன். இனி நான் விழாமல் இருக்க உமது சிலுவையையே எனது ஊன்று கோலாக பயன்படுத்த வரம் அருளும்.

எங்கள் பேரில்………………

என் தேடல் நீ……………………..

**“4-ம் நிலை”**

**“<u>உறுதி கொள்</u>”**

**“அன்னை மரியாள் இயேசுவை சந்திக்கின்றார்”**

திவ்ய இயேசுவே …………….

இயேசுவின் சிலுவை பாதையில் அதுவும் தடுமாறி வீழ்ந்த **“கல்வாரியை தேடும் கடவுளுக்கு”** அன்னையின் சந்திப்பு **“ஆவியின் அபிஷேகமாய்”** அருள் வல்லமையின் சந்திப்பாய் நிகழ்ந்தது.

திருச்சபையின் மிக வல்லமையுள்ள ஓர் திருவருட்சாதனம் **“உறுதி பூசுதல்”** இதன் மூலம் ஆவியின் அபிஷேகமும் அவருடைய ஏழு கொடைகளையும் முழுமையாக ஒருவர் பெற்று விண்ணக வாழ்வை உலக வாழ்வின் பாதை வழியாக தேடிப் பெற்றிட வரம் பெறுகின்றார். **“இது நமது விசுவாசம்”.**

இறைவனின் அடிமையாக தன்னை ஈந்த அன்னையின் மீது பரிசுத்த ஆவியானவர் நிழலிட்டு தங்கினார், எனவே இம்மானுவேலன் மரியாளின் மைந்தன் ஆனார்.

கல்வாரியின் மடியில் உலக மாந்தர்களாகிய நாம் அனைவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேக பெட்டகமான மரி அன்னைக்கு இம்மானுவேலனால் மைந்தர்கள் ஆனோம். அன்னையின் அபிஷேகத்தில் பங்கு பெற்றோம்.

வாழ்வில் தினமும் நாம் பலரை சந்திக்கின்றோம். அப்போது, நாம் அவர்களுக்கு **“தள்ளாடி தடுக்கி விழுந்த இயேசுவாக”** காட்சி தருகின்றோமா? அல்லது தாங்க வந்த **“அன்னை மரியாளாக ஆவியின் அருட்கொடையின் அபிஷேகமாக”** இருக்கின்றோமா?

நாம் அன்னை மரி மைந்தர்கள் அல்லவா ! பிறருக்கு அன்னை மரியாளாய் மாறுவோம், அரவணைப்போம், ஆவியின் கொடைகளை பகிர்ந்து கொள்ளுவோம்.

**ஜெபம்**

இறைவா எனக்குள் உள்ள ஆவியின் கொடைகளைத் தேடி உணர்ந்து அதனை நிறை மனதோடு தேவைப்படும் பிறரோடு பகிர்ந்து மகிழ மரியின் மக்களாய் மாறிட எமக்கு வரம் அருளும்.

எங்கள் பேரில்………………

என் தேடல் நீ………………………

**“5-ம் நிலை”**

**“<u>தவித்த வாய்க்கு தண்ணீர் கொடு</u>”**

**“சீரோன் ஊரானாகிய சீமோன் இயேசுவின் சிலுவையைச் சுமக்கின்றார்.”**

திவ்ய இயேசுவே …………

லூக் 23:26 - சீமோனைப் பிடித்து அவர் மேல் சிலுவையைச் சுமத்தினார்கள்.

மத் 27:32, மாற் 15:21 - சிலுவையைச் சுமக்கும்படி அவரை கட்டாயப்படுத்தினார்.

மூன்று நற்செய்தியாளர்களால் இயேசுவின் சிலுவையுடன் இணைக்கப்பட்ட அயலான் இந்த சீமோன்.

அன்றாட உணவிற்காக உழைத்து ஓய்ந்து வரும் வழியில் சீமோனுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தும் நிர்பந்தம், இயேசுவின் சிலுவையைச் சுமக்கச் செய்தது. சீமோனுக்கு தான் யாருக்காக சுமக்கின்றோம் என்று தெரிந்து இருந்தால், அவர் சிலுவையில் அறையப்பட்டு மரிக்கவும் தன்னை கையளித்திருப்பார்.

நமது வாழ்வில் பிறப்பு முதல் கிறிஸ்து அவனாக/அவளாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் - நம் இறப்பு வரை சந்திக்கும் நிர்பந்தங்கள், கட்டாயங்கள், விடமுடியாத பிடிப்புகள், வேறு வழியில்லை என சுமக்கும் இறக்க முடியாத சுமைகள் எத்தனை, எத்தனை?

இவைகளை யாருக்காக சுமக்கின்றோம் என்று இன்று நமக்குத் தெரியும். ஆனால், அன்று சீமோனுக்குத் தெரியாது.

இன்று நாம் இச்சமுதாய சந்தையில் கிறிஸ்து அவனாக/அவளாக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், கடைசிவரை நம்மைச் சுற்றியுள்ள அயலானுக்கு கிறிஸ்துவாக வாழ்ந்து, இறந்து உயிர்த்தெழுந்திட கிறிஸ்துவால் அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

சேவகர்களின் வாய்ச் சொல் சீமோனுக்கு இயேசுவின் பாரச்சிலுவையை அடையாளம் காட்டியது- இன்று **“இயேசுவின் வார்த்தைகள் நம்மையே இயேசுவாக அயலானுக்கு அடையாளம் காட்டட்டும். நிர்பந்தங்களின் தேடல் நமக்கு நிலைவாழ்வை கட்டாயம் ஆக்கட்டும்.”**

**ஜெபம்**

நல்ல சமாரியனாக நாள்தோறும் முனைப்புடன்
வாழ்ந்திட வரம் தாரும். ஆமென்.

எங்கள் பேரில்………………

ன் தேடல் நீ………………………

**"6ம் நிலை"**

**"<u>இன்றே செய் அதுவும் நன்றே செய்</u>"**

**"வெரோனிக்காள் என்ற பெண் இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள்"**

திவ்ய இயேசுவே - - - - - - - - -

விவிலியத்தின் எந்த ஒரு பகுதியிலும், நினைவுக்கூறப் படாத ஓர் பெண்மணி தனது தைரியமிக்க, பரிவுள்ள, ஒரே ஒரு செயலால் கிறிஸ்துவின் பாடுகளின் திருமுகத்தை உலகிற்கு சான்றாக அளித்து என்றென்றும் நினைவு கூறப்படும் ஓர் உன்னத பெண் ஆகும் பாக்கியத்தை பெற்றுக் கொண்டாள்.

காலம் நிறைவு பெற்றபோது தன்னையே தாழ்த்தி மனிதனாக வந்த கிறிஸ்துவின் ஒரே ஒரு செயல் - இன்று அவரை - **"மனிதகுல மீட்பின் அடையாளமாக நிலைப்படுத்தியது."**

மரியாளின் ஒரு செயல் இயேசுவிற்கு தனது வல்லமையை வெளிப்படுத்த முடியாத கால கட்டத்திலும் தண்ணீரை திராட்சை ரசம் ஆக மாற்றியது. ஒரு சமாரியனின் மனிதநேய செயல் உலகிற்கு அவனை நல்ல சமாரியனாக மாற்றி காட்டியது. சக்கேயு மரத்தில் ஏறிய ஓர் செயல் அவன் வீட்டிற்கு மீட்பைத் தந்தது. புனித பவுல் அடிகளின் ஒரே ஒரு தமஸ்கு நகர பயணம் - புற இனத்தாருக்கு மீட்பை அள்ளித் தந்தது. அன்னை தெரசா அவர்களின் அரவணைக்கும் ஓர் பாசச் செயல் பல தொழுநோயாளிகளுக்கு அமைதியைத் தந்தது.

ஆக ஒவ்வொருவரின் வாழ்விலும் அவர்களின் செயல்கள் தான் அவர்களை அடையாளம் காட்டுகிறது. விதவையின் காணிக்கை அவளை இறைவன் முன் அர்ப்பணத்தின் அடையாளம் ஆக்கியது.

இந்த தவக்காலத்திலும் இனி நாம் தொடரப் போகும் நமது வாழ்நாளிலும் நாம் செய்யப் போகும் எந்த செயல் நம்மை உலகத்திற்கு எப்படி அடையாளம் காட்டப் போகின்றது.

நம் வாழ்வின் எந்த ஒரு செயலால் நாம் உயிர்த்த இயேசுவை உலகிற்கு - அடையாளம் காட்டப் போகின்றேம்? சிந்திப்போம் - தேடிச் செயல்படுவோம்.

**ஜெபம்:**

இறைவா ஓர் மனிதனின் செயல் நிலை தான் அவன் உயிரோடு இருப்பதற்கு அடையாளம். ஆக "நானே உயிர் என எம்மோடு, எமக்குள் உள்ள உம்மை எங்கள் செயல்களால் உலகிற்கு அடையாளம் காட்ட வரம் தாரும்"

எங்கள் பேரில்..................

என் தேடல் நீ...........................

**"7-ம் நிலை"**

**"<u>பொறாமை பொல்லாதது</u>"**

**"இயேசு இரண்டாம் முறை கீழே விழுகின்றார்"**

திவ்ய இயேசுவே………………..

**"பொறாமையும், கட்சி மனப்பான்மையும் எங்குள்ளதோ அங்கே குழப்பமும் - எல்லாத் தீச் செயல்களும் இருக்கும்"** (யாக்: 3-16)லும் மேலும், ஆகையால் **"கடந்ததை மறந்துவிட்டு முன் இருப்பதை கண்முன் கொண்டு இலக்கை நோக்கி முனைந்து ஒடுகின்றேன்"** என (பவுல் பிலி. 3:14) லும் நமக்கு கூறுகின்றார்கள்.

ஓர் மனிதன் தனது வாழ்க்கை பாதையில் சுயநலத்தால் தடுக்கி விழுந்தாலும் அதில் அவனை இன்னும் பாரமாக காயப்படுத்துவது அவனுள் தொடரும் பொறாமையும் கட்சி மனப்பான்மையுமே.

1. சம்மனசு இறைவனைப் பார்த்து பொறாமைப்பட்டது. அலகையாக மாறியது
2. மனிதன் இறை மகிமையை வல்லமைய பார்த்து பொறாமைப்பட்டான் மரணத்தை பரிசாகப் பெற்றான்.
3. ஆபேலைப் பார்த்து காயின் பொறாமைப்பட்டான் - பைத்தியமானன்
4. இயேசுவின் பெயரால் நன்மை செய்யும் பிறரைப் பார்த்து சீடர்கள் சஞ்சலப்பட்டனர். இயேசுவால் கடிந்து கொள்ளப்பட்டனர்.
5. மார்த்தாள் - மரியாளைப் பார்த்து பொறாமைப்பட்டாள்- அவள் மனதில் வருத்தத்தையும், வேதனையையும் பெற்றாள்
6. மூத்த மகன் இளையவனைப் பார்த்து பொறாமைப்பட்டான் ஆகையால் தந்தையிடம் தனக்குள்ள உரிமையை மறந்து வாசலில் வேதனையுடன் நின்றான்.

**ஆனால்,**

இறைவன் ஆறாம் நாளில் தான் படைத்தது அனைத்தும் நன்றாக இருக்கின்றது எனக் கண்டார். இயேசு தன்னோடு இல்லாதவர் தன் பெயரால் நன்மை புரிவதைக் கேட்டு பெருமிதம் கொண்டார். நல்ல பங்கை தேர்ந்தெடுத்த மரியாளை இயேசு பாராட்டினார். **"மரண விழிம்பிலும் நல்ல கள்ளன் இயேசுவின் நன்மைகளை உணர்ந்து இயேசுவின் பால் பெருமிதமும் பரிவும் கொண்டான் - விண்ணக வாழ்வை உரிமையாக்கினான்."**

நாமும் பிற சகோதரர்களின் **"நன்மைகள், பெருமைகள் வல்லமைகளை"** புரிந்து கொண்டு அவர்கள்பால் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைய இன்று அழைக்கப்படுகின்றோம்.

**ஜெபம் :**

இறைவா உமது படைப்பில் அனைத்திற்கும் ஓர் தனி அடையாளம் உண்டு அதை தேடிக் கண்டு பிடித்து பொறமை கொள்ளாமல், நிறைவான பெருமைப்பட்டு மகிழ்ந்து உமது மேன்மையை ஆராதிக்க வரம் தாரும்.

எங்கள் பேரில்………………

என் தேடல் நீ………………………

**"8-ம் நிலை"**

**"<u>உணர்ச்சிகளுக்கு அடிமையாகாதே</u>"**

**"இயேசு தன் பின்னே அழுது கொண்டு வரும் யூத பெண்களுக்கு ஆறுதல் கூறுகின்றார்"**

திவ்ய இயேசுவே..........................

லூக் : 23:27-28 திரளான மக்களும் அவருக்காக மாரடித்துக் கொண்டு புலம்பும் பெண்களும் கூட்டமாக அவரைப் பின் தொடர்ந்தனர். இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி யெருசலேம் மகளிரே எனக்காக அழாதீர்கள் உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்றார்.

ஆம் நம் வாழ்வில் **"உணர்ச்சிகளுக்கு அடிமையாகாமல் உண்மையைத் தேடி"** உணர்ந்து அதன்படி வாழ்வோம். உணர்ச்சிகளுக்கு அடிமை ஆகாத மனிதனைக் காண முடியுமா? **"முடியாது."** எனவே, நம்மை கட்டுப்படுத்தும் உணர்ச்சிகள் நமக்கு உண்மையைத் தேடும் பாதையாக அமையட்டும் -

இயேசு கூறுகின்றார் **"நானே உண்மை என்று"** ஆகையால் நாம்...
அழுது ஆர்ப்பரிக்காமல் அமைதியாக இருக்கக் கற்றுக் கொள்வோம்.
ஆசைகளுக்கு அடிமையாகாமல் நிலை வாழ்வில் நிறைவைத் தேடுவோம்.
கோபத்திற்கு கட்டுபடாமல் வாழ பொறுமையை நாடிச் செல்வோம்.
பரிதவிப்பிற்கு ஆளாகாமல் இருக்க பரிகாரங்களைத் தேடுவோம்.
ஆணவம் அகங்காரத்திற்கு உடன்படாமல் தாழ்ச்சியை உரிமையாக்குவோம்.
பழிக்கு ஆளாகாமல் இருக்க பிறரை இகழ்வதை விட்டுவிடுவோம்.
பாவத்திற்கு பணியாமல் பரிசுத்தத்தை அணிந்து கொள்வோம்.
எளிமையைக் கண்டு உயர பெத்லகேம் குடிலை நாடிச்செல்வோம்.
மன்னிப்பை மனதோடு பகிர்ந்திட கல்வாரியைத் தேடிச் செல்வோம்.
அன்பை பகிர்ந்து பரமனோடு இணைய நம் அயலானை நாடிச் செல்வோம்

**"இயேசுவை இயேசுவாக"** கண்டு களித்திருக்க **"மனிதத்தை"** தேடிச் செல்வோம்.

**ஜெபம்**

இறைவா உணர்சிகளுக்கு அடிமை ஆகி எங்கள்
இயலாமைக்காக அழுது கொண்டு இருக்காமல்
இயன்றதை செவ்வென செய்து
உம்மோடு இன்று நான் வாழும் மனிதத்தில் இணைய அருள்தாரும்.

எங்கள் பேரில்..................

என் தேடல் நீ..........................

## "9-ம் நிலை"

## "இயலாமை ஒரு ஆட்கொல்லி"

## "இயேசு மூன்றாம் முறை குப்புற கீழே விழுகின்றார்"

திவ்ய இயேசுவே…………….

தேவமைந்தன் மனிதச் சாயலில் சிலுவையின் பாரம் தாங்காமல் மூன்றாம் முறை கீழே விழுந்தார். - மனிதர்களாகிய நாம் எதன் பாரத்தால் எத்தனை முறை விழுகின்றோம்? **மனித பலவீனம், இயலாமை** நாம் எவ்வளவு முயன்றாலும் நம்மை கீழே தள்ளுகிறது.

எசேக்கியேல்: 37:11-ல் இஸ்ரேயலர்கள் - எங்கள் எழும்புகள் முற்றிலும் உலர்ந்து போயின, எங்கள் நம்பிக்கை அற்றுப் போயிற்று, நாங்கள் முற்றிலும் அறுபட்டோம் என்றனர்.

இயேசுவின் சீடர்கள் கெஸ்தமனியில் இருமுறை எச்சரிக்கப்பட்டும் மூன்றாம் முறை கண்டபோதும் உறங்கிக் கொண்டிருந்தனர். புனித பவுல் அடிகளாரோ நான் எதைச் செய்ய விழைகின்றேனோ அதைச் செய்ய முடிவதில்லை என ரோ : 7-ல் கூறுகின்றார். **"ஆக வீழ்ச்சி என்பது பாதையில் இயற்கை."**

சாமான்யனுக்கு கண்டிப்பாக இப்படி ஓர் நிலை உருவாகும். அது ஏன் எனில் சாமானியன் **"சுயநலம்", "பொறாமை"** என்ற காலணிகளை பெருமையுடன் **"நான்"** என்ற மமதையில் அணிந்து நடக்கும் போது எழ முடியதா நிலைக்கு தள்ளப்படுகின்றான்.

எனவே, மத் 26:41 மற்றும் மாற் 14:18 -ல் இயேசு - **"ஆவி ஊக்கமுள்ளது தான் ஊனுடலோ ஒன்றுக்கும் உதவாது எனவே, வழித்திருந்து ஜெபியுங்கள்"** என்றார். சிறுவனான சாமுவேலுக்கு அவருடைய குரு ஏலி வழிகாட்டினார். மூன்றாம் முறையும் தன்னை அழைத்தது யாரென்று அறியாச் சிறுவனுக்கு இறை அழைப்பு வரும்போது **"ஆண்டவரே பேசும் அடியவன் கேட்கிறேன்."** என பதிலாளிக்க சொல்லிக் கொடுத்து அவனை ஏலி அனுப்பினார். - இறைவார்த்தையை கேட்கச் செய்தார்.

**"ஒவ்வொரு தோல்வியும் வரும் வெற்றியின் முதல்படி"**
**ஒவ்வொரு இருளும் வரும் விடியலின் வாசற்படி"**

தோல்விகளையும், வீழ்ச்சிகளையும் உரிமையாக்கிய நம்மை, தாயாம் திருச்சபை எழுச்சி பெற்று விண்ணகம் நோக்கி வர அழைக்கின்றது. எனவே, வாழையடி வாழையாக இயேசுவின் மரபில் அவரால் அபிஷேகம் பெற்ற சீடத்துவத்தால் வழங்கப்படும் **"ஒப்புரவு அருட்சாதன"** ஏணிப்படிகளில் ஏறிட அழைப்பு விடுக்கின்றது.

புனித அருளப்பர் தன் திருமுகத்தில் நம்மில் பாவம் இல்லை என்போமாகில் - நாம் விழவில்லை என் போமாகில் நாம் பொய்யர்கள் - என்கிறார். நமது வீழ்ச்சிகளை எழுச்சி ஆக்கிட அன்பின் சிலுவையை பற்றிக் கொள்வோம்.

**ஜெபம்:**

இறைவா அரு 6:63-ல் உயிர் அளிப்பது ஆவியே ஊனுடன் ஒன்றுக்கும் உதவாது நான் சொன்ன சொற்கள் உங்களுக்கு ஆவியும் உயிரும் ஆகும் என்ற உமது அருள்வாக்கு எமக்கு ஒளியின் ஏணிப்படிகள் ஆகட்டும்.

எங்கள் பேரில்………………

என் தேடல் நீ………………………

**“10-ம் நிலை”**

**“<u>வயல்வெளி மலர்கள் கூட வண்ண வண்ணமாய் உடுத்துகின்றன</u>”**

**“இயேசுவின் ஆடைகளை உறிகிறார்கள்”**

திவ்ய இயேசுவே ……………………………………..

ஆதி: 3: 9-10 அப்போது கடவுள் ஆதாமைக் கூப்பிட்டு எங்கே இருக்கின்றாய்? என்றார், அதற்கு அவன் நான் இன்ப வனத்தில் உம்குரலைக் கேட்டேன். நிர்வாணனாய் இருந்ததால் பயந்து ஒளிந்து கொண்டேன் என்றான் அன்று.

முதல் ஆதாம் **தன் மனைவியாலும் தந்திரமுள்ள பாம்பினாலும்** வஞ்சிக்கப்பட்டு நிர்வாணமானான்.

இன்று - இரண்டாம் ஆதாம் ஆகிய கிறிஸ்து **நண்பன்** (யூதாஸ்) **சமுதாய அமைப்புகள்** (பரிசேயர் மதகுருக்கள்) **ஆளும் அரசியல் அதிகாரங்கள்** (பிலாத்து உரோமை அரசு) மற்றும் **எங்கும் கூடும் திராளான மக்கள்** கூட்டத்தால் நிர்வாணமாக்கப்பட்டார்.

இயேசுவிற்கு இப்படி நிகழ்ந்ததென வருத்தப்படுகின்றோம்! பயன் என்ன? **“நமக்கும் உறவுகள், நண்பர், சமுதாய அமைப்புகள், அரசியல் அதிகாரங்கள் மற்றும் மக்கள் கூட்டம் உண்டு”.** சில மாதங்களுக்கு முன் ஓர் பெண்ணிற்கு நடந்த வன்கொடுமைகள் நாட்டையே உலுக்கியது மக்கள் கோபப்பட்டு எழுந்தனர்.

**“இது மட்டும் தான், இத்தகைய செயல்நிலைதான் - நிர்வாணமா?”** இல்லை எப்போது நாம்…… 1. பிறருடைய அந்தரங்கங்களை, ரகசியங்களை வெளிப்படையாக பேசும் போதும் 2. பிறருடைய இயலாமையை கேவலப்படுத்தும் போதும் 3. அதிகாரம் உள்ளவர்கள் சட்ட நிர்வாகத்தால் பிறரை வஞ்சிக்கும் போதும் 4. அபலைகளையும் நிர்கதியானவரையும் அனாதைகளாய் விட்டுவிடும் போதும் 5. உள்ளவர்கள் இல்லாதவரின் அத்தியாவசியத் தேவைகளைக் கூட நிறைவேற்ற மறுக்கும் போதும் **அவர்களை முழுமையாக நிர்வாணியாக்குகின்றோம்.** என்பதை நினைவு கொள்வோம். இந்த அவலங்களை மாற்ற இன்று இயேசுவால் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் **“பரிதாபங்கள் இன்று பயன்படா”** தேவ ஆலயம் கள்வர் குகை ஆன போது **இயேசுவும் கோபப்பட்டார்**. நம் சகோதரம் கள்வர் குகையை விட கேவலமான நிர்வாண நிர்கதிக்கு தள்ளப்படும்போது **நாமும் கோபப்பட வேண்டும்**. இந்த சகோதரத்தை இறைவன் வாழும் ஆலயமாக்கிட கரம் கோர்ப்போம்.

**ஜெபம் :**

“இறைவா இன்றைய சமுதாயத்தில் வன்கொடுமைகளைக் கண்டு எனக்கேன் வம்பு” என விலகிச் செல்லாமல் அவைகளை மாற்றி சீரமைத்திட எங்களுக்கு மன உறுதியும் செயல் திறனைத் தாரும்”

எங்கள் பேரில்………………

என் தேடல் நீ………………………

**"11 -ம் நிலை"**

**"<u>மூன்று காலங்களும் உன் கையில்</u>"**

**"மூன்று ஆணிகளால் இயேசுவை சிலுவையில் அறைந்தனர்"**

திவ்ய இயேசுவே…………………………..

உரோமைச் சேவகர்கள் அரசின் கட்டளைப்படி இயேசுவை மூன்று ஆணிகளால் சிலுவையோடு இணைத்தனர். இயேசு சிலுவையுடன் இணைந்ததால் அவமானத்தின் சின்னமான சிலுவை மீட்பின் அடையாளமாயிற்று. மனிதர்கள் ஒவ்வொருவரிடமும் மூன்று ஆணிகள் உண்டு அவை **1. சொல் 2. செயல் 3. சிந்தனை** என்பவையே இவை. இயேசுவிடம் இருந்தன.

**இயேசுவின் சொற்கள்** :

கேட்டவர்களுக்கு நம்பிக்கையை, விடுதலையை, மகிழ்சியை, ஆறுதலைத் தந்தன.

**இயேசுவின் செயல்கள்** :

பசியை போக்கியது, நோய்களை குணமாக்கியது. இறந்தோரை உயிர்பித்தது. கள்வர் குகையாக மாறிய ஆலயத்தை மீண்டு இறைவன் இல்லம் ஆக்கியது. பாதங்களை கழுவி பணிவை காட்டியது முடிவாக அன்பின் பகிர்வைத் தந்தது.

**இயேசுவின் சிந்தனைகள்** :

இறைவனுக்குள் அவரை ஐக்கிமாக்கியது. சீடர்களுக்கு உறுதியான விசுவாச செயல் திறனைத் தந்தது. மனுக்குலத்திற்கு நேரிய வாழ்வின் வழியானது முடிவாக அவருடைய ஆவியைத் தந்தைக்கு அர்பணிக்கச் செய்து, விண்ணையும் மண்ணையும இணைத்தது.

நாமும்… சற்று, நமக்குள் தேடிப்பார்ப்போம் **நமது சொல் செயல் சிந்தனைகள் யாருக்கு எதை? எப்படி? எப்போது? தந்தது? தருகின்றது? தரப்போகின்றது?** என்று.

நமது சொற்கள் நம் அயலானக் **"கூவி அழைக்கட்டும்."** நமது செயல்கள் நம் அயலானை **"தேடிக் கண்டு பிடித்து"** அவனை இயேசுவுடன் இணைக்கட்டும். நமது சிந்தனைகள் நாம் அவனுக்கு கிறிஸ்து அவனாக/அவளாக **"அவன் நம்மை"** அடையாளம் கண்டிட நம்மை பக்குவப்படுத்தட்டும்.

**ஜெபம்:** இறைவா இந்த வல்லமையுள்ள மூன்று ஆணிகளால் மூன்று காலங்களிலும் மூவொரு இறைவனான உம்மை வணங்கி ஆராதித்து எமது அயலானுடன் உம்மை பகிர்ந்து வாழ எங்களை இணைத்திட அருள்தாரும்.

எங்கள் பேரில்………………

என் தேடல் நீ………………………

**“12-ம் நிலை”**

**“<u>மன்னிப்பும், அர்ப்பணமும் மனிதனின் இரு கண்கள்</u>”**

**“இயேசு தம் ஆவியை அர்பணிக்கின்றார்”**

திவ்ய இயேசுவே………………..

**“தந்தைக்கு ஆவியைத் தந்த இயேசு இம் மண்ணிற்கு மன்னிப்பைத் தந்தார்”**

**மண் - இனிப்பு** என தொடர்ந்து வேகமாக உச்சரித்துப் பாருங்கள் அது **மன்னிப்பு** என்று ஒலிக்கும் ஆம் மண் (மனுகுலம்) இனிக்க வேண்டுமானால் மலரட்டும் இந்த மன்னிப்பு பூவுலகெங்கும்.

இன்றும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு பின்னும் கிறிஸ்துவம் - பிற சமயங்களிலிருந்து வித்தியாசப்பட்டு மாறுபட்டு நிலைத்திருப்பதற்கு மறுக்கப்பட முடியாத காரணம், **“கிறிஸ்துவம் மட்டுமே இந்த மனுக்குலத்திற்கு மன்னிப்பை கல்வாரியில் பெற்றுத்தந்தது.”**

‘‘தந்தையே இவர்கள் செய்வது இன்னது என அறியாமல் செய்கிறார்கள் எனவே மன்னியும்’’ என்றார் இயேசு பிரான் - அதனால் தான் அத்தனை திரளான மக்கள் கூட்டத்தைப் பார்த்து பிலாத்து இயேசுவை அவர்களுக்கு காட்டி **“இதோ மனிதன்”** என்றான். ஆம் மன்னிப்பவனே மனிதன்.

நாம் வாழும் இந்தச் சமுதாயத்திலும் **“மனிதர்கள்”** பிலாத்துவின் அறிவிப்பின் படி - இயேசுவின் செயல்படி நிறைய இருக்கிறார்கள் தேடுவோம் நம்பிக்கையோடு, அந்த மனிதர்களைத் தேடி கரம் கோர்த்து வழி நடப்போம். அகிலம் சமாதானத்தை மன்னிப்பின் பரிசாக பெற்று மகிழட்டும்.

**“பிழைகளை மன்னிப்பது மனித குணம்**
**மன்னித்து மறப்பது இறைவன் குணம்”**

பிந்தையது நமக்குச் சற்று கடினமானாலும் முந்தியதை **“மன்னிப்பபதை”** நம் வாழ்வாக்குவோம். அப்போது நம் தேவன் நம்மையும் பார்த்து **“இன்றே நீ பரகதியில் என்னோடு இருப்பாய்”** என நம்மிடம் கூறுவார்.

**ஆம் இயேசு நம்மோடு**

**ஜெபம்**

பரலோகத்தில் இருக்கின்ற…………….

எங்கள் பேரில்………………

என் தேடல் நீ………………………

**“13-ம் நிலை”**

**“கூடப்போ குறுக்கே போகாதே”**

**“இயேசுவின் உடலை மரி அன்னை மடியில் வளர்த்துகிறார்கள்”**

திவ்ய இயேசுவே……………………

“உலகில் எந்த ஒரு உயிரினமும் ஏற்க முடியாத ஒரு சம்பவம் தன் வயிற்று மரபை தானே உயிரற்று ஏற்பது தான்” அன்று சிமியோன் கூறினார் : உன் இதயத்தை ஓர் வாள் ஊடுருவும் அதனால், பலரின் உள்ளங்களில் நின்று எண்ணங்கள் வெளிப்படும் என்று

இன்று சாமான்யனின் உள்ளத்தில் எழும் ஓர் கேள்வி - **“எப்படி இது சாத்தியம்?”** ஓர் சாதாரன பெண் மணிக்கு? என்பதே. மரியாள் ஓர் சாதாரண பெண் அல்ல, அவள் இறைவனின் அடிமை. அந்த அடிமை நிலையையே தனது வாழ்வாகக் கொண்டவள். அதனால் அவள் பெற்ற பரிசு தூய ஆவியானவர் **“நிழலிட்டு தங்கும் பெட்டகம் ஆனாள்”.** எனவே இம்மானுவேலனுடன் இணைந்து வாழும் பாக்கியம் பெற்றாள்.

இந்த வாழ்க்கையில் **“அவர் செய்த ஓர் மிகப் பெரிய பணி இயேசுவை இம்மானுவேலனைத் தேடி அவரைத் தொடர்ந்து வந்தது தான்.”**

12 வயதில் கோயில் திருவிழாவில் **“தொடங்கிய தேடல்”** கானாவூர் திருமணம், மக்களுடன் போதிக்கும் பொது வாழ்க்கை, கடைசியாக கல்வாரி பயணம் என எல்லா இடங்களிலும் அவரைத் தேடித் தொடர்ந்தது. ஆனால் அந்த தேடலின் போது, உலகம் அவரை கைவிடும் வரை - **“மரணம் வரை”** இயேசுவின் பயணத்தின் குறுக்கே மரியாள் தாய் என தடையாக நிற்கவில்லை.

மரத்தில் அமர்ந்து இயேசுவைப் **“பார்க்க மட்டுமே”** ஆசைப்பட்ட சக்கேயு அவரை மரத்தில் அமர்ந்தபடி கூப்பிட்டிருக்கலாம் ஏதெனும் ஒன்றைச் செய்து இயேசுவின் கவனத்தை தன் பக்கம் இழுத்திருக்கலாம் **“சக்கேயு இயேசுவை அவர் வழியே போக விட்டான். இறைவனின் சித்தத்திற்கு குறுக்கே வரவில்லை”** பின் நடந்தது நமக்கு தெரியும். இயேசு நின்று திரும்பி சக்கேயுவிற்கு மட்டுமல்ல அவர் வீட்டாருக்கும் மீட்பை அளித்தார்.

இங்கு கவனிக்க இந்த சக்கேயு மிக சாமன்யன், வரி வசூலிப்பவன் மரியன்னை போல் ஆவியின் அபிஷேகம் அற்றவன். எனவே, நமக்குள் எழுந்த கேள்விக்கு பதில் சங் 45:10 -ல் கூறுவது போல் “**அமைதியுடன் இருந்து அவரை ஆண்டவர் என ஏற்றுக் கொண்டால்”** - நமக்கு எத்தகைய கசப்பான நிலைகளையும் கடந்து செல்ல முடியும் என விவிலியம் கூறுகிறது.

**ஜெபம்**

இறைவா வாழ்வின் எல்லா நிலைகளிலும் **“நீரே அமைதி”** என்பதை உணர்ந்து உம்மோடு இணைந்து நீர் மட்டுமே எனது இறைவன் என்று என் வாழ்வை தொடர வரம் தாரும்

எங்கள் பேரில்………………

என் தேடல் நீ………………………

**"14-ம் நிலை"**

**"<u>அடக்கம் அமரருள் உய்க்கும்</u>"**

**"இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்தனர்"**

திவ்ய இயேசுவே……………………

**"நரிகளுக்கு வளைகள் உண்டு, பறவைகளுக்கு கூடுகள் உண்டு ஆனால் மனுமகனுக்கோ தலைசாய்க்க இடமில்லை"** - விவிலியம் இயேசுவின் நிலையை இப்படித்தான் வர்ணிக்கின்றது. யூதர்களின் மரபுப்படி ஒவ்வொரு யூதனுக்கும் அவர்களுக்கென்று தனி கல்லறை உண்டு. அப்படிப்பட்ட ஒருவரின் கல்லறையில் அதுவரை யாரையும் வைக்காத ஓர் கல்லறையில் இயேசுவை அடக்கம் செய்தனர்.

இன்று கிறிஸ்துவர்களாக இருக்கும் நமக்கு நம் தலையை சாய்க்க ஓர் கல்லறை வேண்டும். அப்படியாயின் அந்த பரிசுத்தமான கல்லறை எது? நாம் நம்மை அடக்கம் செய்ய நமது எல்லா இயல்புகளையும், உணர்வுகளையும் அடக்கம் செய்து அமைதியில் இளைப்பாற **"கிறிஸ்துவே அந்த புனித கல்லறையாக,"** அமைதிதரக் கூடிய கல்லறையாக நமக்கென்று இருக்கின்றார்.

வாருங்கள் கிறிஸ்துவுக்குள் நாம் நம்மை அடக்கம் செய்வோம். புனித பவுல் கூறுகின்றார் வாழ்வது நானல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கின்றார் என்று - **கிறிஸ்தவிற்குள் நாம் வாழ அவரில் நம்மை அடக்கம் செய்வோம்.** அப்படி நாம் கிறிஸ்துவுக்குள் நம்மை அடக்கம் செய்து கொள்ளும் போது பரமபிதா தரும் ஓர் ஆணித்தரமான அற்புதமான வாக்குறுதியை கவனமாகக் கேட்போம்.
எசேக்கியேல் 37:12-14

ஆண்டவராகிய இறைவன் கூறுகின்றார் **"என் மக்களே இதோ நாம் உங்கள் கல்லறைகளைத் திறப்போம். உங்கள் கல்லறைகளைத் திறந்து அவற்றினின்று நாம் உங்களை எழுப்பும் போது நாமே ஆண்டவர் என்பதை அறிவீர்கள். உங்களுக்குள் நம் ஆவியை புகுந்துவோம், நீங்கள் உயிர் பெறுவீர்கள். உங்கள் சொந்த நாட்டில் உங்களை வாழவைப்போம் அப்போது ஆண்டவராகிய நாமே இதைச் சொன்னோம் நாமே இதைச் செய்து முடிந்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்"** என்கிறார் ஆண்டவர்.

**"இறைவன் நம்மை தமது ஆவியால் உயிர்தெழச் செய்ய கிஸ்துவுக்குள் நம்மை அடக்கம் செய்வோம"** - அப்போது விண்ணக வாழ்வு நமதாகும்

**ஜெபம்:**

இறைவா மரணம் கிறிஸ்துவுக்குள் உயிர்பெற்று வாழ உம்மால் எமக்கு அருளப்படும் ஓர் வரம் என்பதை ஏற்றுக் கொள்ள மனத்தெளிவைத் தாரும்.
எங்கள் பேரில்………………

என் தேடல் நீ………………………